# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

## ஊடக அறிக்கை

### நன்கொடை அடிப்படையிலான திட்டங்களுக்கு மேலதிக நிதியை ஒதுக்கிய இந்தியா

அநுராதபுரத்தில் நிர்மாணிக்கப்பட்டுவரும் வீடுகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகளுக்காக மேலதிகமாக 150 மில்லியன் இலங்கை ரூபாவினை வழங்குவதனை உறுதிப்படுத்தும் இராஜதந்திர ஆவணங்கள் இந்திய உயர் ஸ்தானிகர் கௌரவ சந்தோஷ் ஜா மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் திரு.W.S.சத்யானந்தா ஆகியோரால் 2024 மார்ச் 21ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டு பரிமாறிக்கொள்ளப்பட்டது. இந்நிதி ஒதுக்கீட்டுடன் குறித்த திட்டத்திற்காக இந்தியா வழங்கிய மொத்த நன்கொடையானது 450 மில்லியன் இலங்கை ரூபாவாக அதிகரித்துள்ளது.

2. குறித்த மேலதிக நன்கொடையின் அடிப்படையில், இந்திய அரசாங்கத்தின் நன்கொடை உதவியின் கீழ் இக்கிராமத்தில் 90 வீடுகள் நிர்மாணிக்கப்படும். குறித்த திட்டம் தற்போது நடைமுறைப் படுத்தப்பட்டுவரும் அதேவேளை முன்மொழியப்பட்ட இந்த வீடுகள் நிர்மாணப்பணிகளின் பல்வேறு நிலைகளில் காணப்படுகின்றன. சங்கைக்குரிய மாதுளுவாவே சோபித தேரர் ஞாபகார்த்த ஸ்தாபனத்துடன் இணைந்து இந்த திட்டமானது முன்னெடுக்கப்பட்டுவருகின்றது.

3. இந்நிலையில் இலங்கையின் பொருளாதார தோற்றப்பாட்டில் ஏற்பட்ட கனதியான மாற்றங்களுக்கு பதிலளிக்கும் வகையிலும், இத்திட்டத்துக்கான மூலச் செலவீன ஒதுக்கீட்டில் மூலப்பொருட்களின் விலை அதிகரிப்பினால் ஏற்பட்டுள்ள சடுதியான பாதிப்புகளைத் தணிக்கும் முகமாகவும், அதேபோல இத்திட்டங்களை துரிதமாக நிறைவேற்றும் வகையிலும் நடைமுறையில் உள்ள குறித்த 9 திட்டங்களுக்கான மேலதிக நிதி ஒதுக்கீட்டை வழங்க இந்திய அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அதனடிப்படையில் குறித்த 9 திட்டங்களுக்காகவும் ஏற்கனவே இந்திய அரசாங்கத்தால் வழங்கப்பட்டிருந்த நன்கொடைத் தொகையில் 50 வீதம் வரையில் அதிகரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

**********************

**கொழும்பு**
**21 மார்ச் 2024**